# சோழிங்கநல்லூர் காரப்பாக்கம் குடிநீர் வழுங்கல்திட்டம்

சோழிங்கநல்லூர்-காரப்பாக்கம் குடிநீர் திட்டம், ரூ.35.70 கோடி மதிப்பீடு செய்யப்பட்டு, தற்போது98 சதவீதம் பணிகள் நிறைவடைந்து 90 சதவீதம் பணிகள் மக்களின் பயன் பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.

- **குடிநீர் அபிவிருத்தித் திட்டம் கீழ்கண்டமுக்கியபணிகளைக் கொண்டுள்ளது**:

1. பகிர்மான குழாய்கள் பதிக்கும் பணிகள் : 114451 மீட்டர்
2. உந்து குழாய்கள் பதிக்கப்படும் பணிகள் : 2170 மீட்டர்
3. வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் பணிகள் : 8100
4. 2 இடங்களில் மேல்நிலை தொட்டிகள்கட்டும் பணிகள்:
   1. ஸ்பிரிங் கார்டன் 2வது அவின்யூ - 15.0இலட்சம் லிட்டர்
   2. நெடுஞ்செழியன் சாலை - 20.0 இலட்சம் லிட்டர்
5. 1 இடத்தில் கீழ்நிலை தொட்டிகட்டும் பணிகள்.
   ஸ்பிரிங் கார்டன் 2வது அவின்யூ - 2.5 இலட்சம் லிட்டர்

- **ஒப்பந்தத்தின் விவரங்கள்** :

இத்திட்டத்திற்கான ஒப்பந்தப் பணிகள் ரூ.2759 இலட்சத்திற்கு 24 மாதத்தில் பணி முடிக்க M/s VA Tech Wabag Ltd. Consortium with Sai Sudhir Infrastructure Ltd-க்கு 21.05.2013 அன்று கொடுக்கப்பட்டது. இப்பணி 12.09.2013 அன்று தொடங்கப்பட்டு 11.09.2015 அன்று முடிக்க உத்தேசிக்கப்பட்டது. இத்திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பொது மக்களின் பயன்பாட்டிற்கு தொடங்கி வைக்கப்பட்டது.

**பணிகளின் தற்போதையநிலை**:

1. தற்போது 98 சதவீதம் பணிகள் நிறைவடைந்து 80 சதவீதம் பணிகள் மக்களின் பயன் பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. மீதமுள்ள பகுதிகளில் சோதனை வெள்ளோட்டத்தில் காணப்படும் சிலக் குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.
2. இதுவரை இத்திட்டத்திற்குரூ.3937.98இலட்சம் நிதி செலவிடப்பட்டுள்ளது.
3. இத்திட்டம் நிறைவேறியவுடன் சோழிங்கநல்லூர்-காரப்பாக்கம் பகுதியில் தேவையான 6.09 மில்லியன் லிட்டர் குடிநீர் நெமிலியில் அமைந்துள்ள கடல் நீரை குடிநீராக்கும் நிலையத்தின் மூலம் பெறப்பட்டு விநியோகிக்கப்படும்.
4. இதன் மூலம் சுமார் 48,941மக்கள் பயன் பெறுவார்கள்.

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
CHN_Metro_Water CMWSSB chennaimetrowater https://cmwssb.tn.gov.in